# வங்காளதேச ஆடவர்களின் கடைகளுக்கு சீல்

கோலாலம்பூர், மே 28-
வங்காளதேச ஆடவர்கள் சட்டவிரோதமான முறையில் வியாபாரம் செய்து வந்ததை அறிந்த கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் அமலாக்கப் பிரிவினர் அக்கடையில் இருந்த பொருட்களைப் பறிமுதல் செய்தனர்.

கடந்த சனிக்கிழமை தலைநகர் ஜாலான் பெட் டாலிங்கில் அந்த வங்காளதேச ஆடவர் நடந்திவந்த கடையில் திடீர் சோதனையிட்டபோது இவ்விவகாரம் அம்பலத்திற்கு வந்தது.

கோலாலம்பூர் மாநகர் மன்றத்தினர் மேற்கொண்ட விசாரணையின்போது வங்காளதேச ஆடவர்கள் பெட்டாலிங், ஹங் லெக்கிர் சாலைகளில் வியாபாரம் செய்து வந்ததாக அது தனது ஃபேஸ்புக்கில் கூறியுள்ளது.

உள்நாட்டவர்களுக்கு வழங்கப்பட்ட லைசென்சைக் கொண்டு அந்த வங்காளதேச ஆடவர்கள் அங்கு வியாபாரம் செய்து வந்தது தெரிய வந்ததாக கோலாலம்பூர் மாநகர் மன்றம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியது. கோலாலம்பூர் மாநகர் மன்றம் மேற்கொண்ட விசாரணையின்போது அப்பகுதியில் வியாபாரம் செய்வதற்கு லைசென்ஸ் பெற்றிருந்த மலேசியர்கள் அதனை அந்நிய நாட்டு ஆடவர்களுக்கு வாடகைக் குக் கொடுத்து வந்ததாகவும் தெரிய வந்ததாக அந்த அறிக்கை கூறியது.



கோலாலம்பூர் மாநகர் மன்றத் தின் அமலாக்கப் பிரிவினர் அங்கு சோதனை நடத்தியபோது அறுவர் அப்பகுதியில் சட்ட விரோதமான முறையில் வியாபாரம் செய்தது தெரிய வந்தது.

அவர்கள் ஜவுளி, இடைவார், கைப்பை, கைப்பேசி, காலணிகள் உட்பட மேலும் பல பொருட்களை விற்பனை செய்து வந்தது அடையாளம் காணப்பட் டதாகவும் அந்த அறிக்கை கூறியது.

இச்சோதனையின் போது அவர்களின் கடைகளில் இருந்து 1,440 பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் அது பின்னர் செராஸ் தாமான் மிஹார்ஜாவில் உள்ள கோலாலம்பூர் மாநகர் மன்றத் தின் கிடங்கிற்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் அது கூறியது. 2016ஆம் ஆண்டு கோலாலம்பூர் அங்காடிக் கடை களின் லைசென்ஸ், 1974ஆம் ஆண்டு கட்டட, கால்வாய் சட்டத்தின் கீழ் இவ்விவகாரம் விசாரிக்கப்பட்டு வருவதாக வும் அது கூறியது.

விதிமுறைகளை மீறியதற்காக மேற்குறிப்பிட்ட வங்காளதேச ஆடவர்களுக்குக் கடைகளை வாடகைக்குக் கொடுத்த மலேசியர்களின் லைசென்சுகளை ரத்து செய்யுமாறு கோலாலம்பூர் மாநகர் மன்றம் உத்தரவிட் டுள்ள அதேவேளையில் அவர்களின் பெயர்கள் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்பட் டுள்ளதாகவும் அந்த அறிக்கை கூறியது.

SA